# உறவின் இனிமை

அவசர அவசரமாய்த் தலைக்கொண்டையில் ஊசிகளைச் செருகிக்கொண்டே சாரதா வந்தாள். "இப்படிப் பாருங்களேன்! சரியாய் அமைந்திருக்கிறதா, பிச்சோடா? இந்த இரண்டிலே ஏது உடுத்தட்டும்? வெயில் வேளையாச்சே! சொல்லுங்கள்" என்றவாறே கட்டிலின் கொசுவலைச் சட்டத்தின்மீது போட்டிருந்த இரண்டு சேலைகளையும் காட்டினாள்.

ஒரு புடைவையின் நிறம் வேனிற் காலத்தின் துவக்கத்தைக் குறிக்கும் மாந்தளிர் வண்ணம். மற்றொன்று, இராப்பகல் மண்ணுலகத்தின்மீது கவிந்துகொண்டிருக்கும் ஆகாயத்தின் நீல வர்ணம்.

"எதை வேண்டுமானாலும் உடுத்தேன்; நீலத்தையே கட்டிக்கொள்" என்றான் கணபதி.

"நேற்றுக் கட்டிக்கொண்டதையேயா? ஏன் இந்த மாந்தளிர் நன்றாய் இருக்காது? இந்த இரண்டுமே வேண்டாம். உள்ளேயிருந்து எடுக்கிறேன்." சாரதா பீரோவைப் பார்த்தாள்.

திரும்பிப் பார்க்காமல் போய்ப் பீரோவைத் திறந்துவிட்டு நின்றாள். தான் அணிந்திருந்த சோளியை ஒரு பார்வை பார்த்துக்கொண்டாள். பிறகு புடைவைத் தொகுதியைப் பார்த்தாள். பொடிநிறச் சேலையொன்றைச் சாரதா தேர்ந்தெடுப்பதைப் பார்த்தான் கணபதி.

"அந்தப் புடைவையை எப்போது உடுத்தப்போகிறாய்?" என்று அவன் கேட்டான்.

அவள் திடுக்கென்று திரும்பிப் பார்த்தாள்.

"எப்போது வேளை வருகிறதோ அப்போது உடுத்திக்கொள்வேன்" என்று கூறிவிட்டுக் கையில் பிடித்த புடைவையைத் தோள்மேல் போட்டுக்கொண்டாள். படீரென்று பீரோக் கதவைச் சாத்திவிட்டுப் பக்கத்து அறைக்குள் மறைந்தாள். சற்று நேரம் கழித்து உடை மாற்றிக்கொண்டு திரும்பினாள். சின்னஞ்சிறு கட்டங்கள் இட்ட அந்தப் பொடிநிறப் புடைவையைக் கணுக்கால் பக்கம் சரிப்படுத்திக் கொண்டே, "எவ்வளவு நன்றாக இருக்கிறது, நார்ப்பட்டு! இந்த ரகத்தில் நாலு புடைவையாய் வாங்கி ஜம்மென்று உடுத்தியிருப்பேன்; நாற்பது ரூபாயை வீணாய்ப் போட்டாயிற்று" என்று கணபதியின் காதில் விழும்படி பேசிக் கொண்டே அங்கும் இங்குமாக நடைபோட்டுப் புறப்பட ஆயத்தமானாள்.

"வாங்கினோமா, வேணுமென்று? அப்படி ஒரு சிக்கலாய் வந்து சேர்ந்தது. உனக்கு வேண்டாவிட்டால் இங்கே அக்கம்பக்கத்தில் யாராவது எடுத்துக்கொள்வார்கள். கேட்டுப் பாரேன்" என்றான் கணபதி நிதானமாக.

"அதுதான் பாக்கி!"

"ஆமாம், அதுதான் பாக்கி; கேள்".

"போதுமே; ஒரு கார்டு எழுதிக் கேட்கக் கைவரவில்லை உங்களுக்கு! நான் அதை விற்கப் பார்க்க வேண்டுமாம்! யாரைக் கேட்கிறது? என்ன என்று சொல்கிறது? கிடக்கட்டும்; இப்பொழுதே அது கட்டுக் கிடையாகியிருக்கிறது; நாற்பது ரூபாய் தானம்; போகட்டும்!"

"எழுதிக் கேட்டுப் பிரயோசனம் இல்லை என்கிறேனே! அப்படிப் பதில் போடுகிறவரானால் போய்ச் சேர்ந்து சம்பளம் வாங்கினதும் பணத்தையே அனுப்பியிருப்பாரே. பணம் அனுப்பினாலும், புடைவையைத் திருப்பி அனுப்ப வேண்டாம் என்றுதான் சொல்லுவார். நாம் விடாப்பிடியாக அனுப்பிவிடுவோம் என்றுதான் பணமும் அனுப்பாமல் கடிதமும் போடாமல் இருக்கிறார். நூறு ரூபாய் பெறுமான புடைவையைக் கொடுத்தார். நாற்பது ரூபாய் தந்தோம்.

அவருக்கும் அது உபயோகமாயிற்று. நீயும் இதை உபயோகப்படுத்த வேண்டியதுதான்; இதில் தப்பு என்ன?"

"தப்பு என்ன? ஒரு தப்பும் இல்லை. நினைவு இருக்கிறதா? முந்தி ஒரு தடவை, கல்யாணம் நடந்த புதிதிலே, என் மாமா பெண்ணின் கதர் சில்க்கை ஆசைக்கு ஒரு நாள் கட்டிக்கொண்டேன். என்னவென்று கேள்வி கேட்டீர்கள்? 'உனக்குப் புடைவையே இல்லையா? அயலார் புடைவையை உடுத்துவானேன்?' என்று கேட்டீர்களே! அதே ஆசாமி இப்படிச் சொல்கிறீர்கள். இப்போது இது உங்களுக்கு உயர்ந்ததாகிவிட்டது."

கணபதி எதிர்பார்க்காத தாக்குதல் இது. "நீயுந்தானே பார்த்தாய்? அந்தச் சமயத்தில் வேறே வழி இருந்ததா?" என்று கேட்டான்.

சாரதா விடை அளிக்கவில்லை. "நாழிகையாச்சு. நான் போய்விட்டு வருகிறேன்" என்று கிளம்பிவிட்டாள். வேலைக்காரி ரிக்ஷா பேசிக்கொண்டு வந்திருந்தாள். பிடில் பெட்டியை ஒரு துணியால் தட்டித் துடைத்து, அதை எடுத்துக்கொண்டு வண்டியில் ஏறினாள்.

வண்டி வாகனங்கள் போவதற்கென்றும், ஜனங்கள் நடப்பதற்கென்றும் தனித்தனியாகப் பாதை பிரித்திருக்கும்போதே, எத்தனை விபத்துக்கள் நேருகின்றன! அதுபோலத்தான், மானிட மனம் எத்தனையோ பாகுபாடுகளுடன் இயங்கினாலும் சில சமயம் தடுமாறித் திண்டாடிப் போகிறது.

"வேறு வழி இருந்ததா?" என்று கேட்டான் அல்லவா கணபதி? தோழி வீட்டுக்குச் செல்லும் வழியில் அதை நினைத்துப் பார்த்தாள் சாரதா. "இல்லை; இருக்கவில்லை, வேறு வழி" என்று சொல்லிக்கொண்டாள்.

* * *

கணபதியும் சாரதாவும் தசரா விடுமுறையில் கல்கத்தா போய் வந்திருந்தார்களே, அப்போது நடந்தது அது. ஊர் மீண்ட வழியில் ஒருவர் பரிசயமானார்; ரெயிலில் ஒட்டுதலுடன் பழகினார். அவர் வைத்திருந்த நற்சாட்சிப் பத்திரங்களையும் உத்தியோகச் சிறப்பின் சின்னங்களையும் பார்த்துத் தம்பதிகள் அதிசயித்தனர். அவருடைய நடையுடை பாவனைகளிலே போலித்தன்மை இல்லை. இன்பம் துன்பம் இரண்டையும் அநுபவித்த பெருமையை அவரிடம் கண்டனர். வேறிடத்துக்கு மாற்றலாகிப் போய்க்கொண்டிருந்தார் அவர். "மீண்டும் இந்த வழியே வந்தால் எங்கள் வீட்டுக்கு வாருங்கள்" என்று கணபதியும் சொன்னான்; சாரதாவும் சொன்னாள். அழைப்பை அவர் ஏற்றார்; விடை கொடுத்தார்.

திடுதிப்பென்று பதினைந்து நாளில் அந்த நண்பர் அவர்களுடைய வீட்டு வாசலில் காட்சியளித்தார். அவர் வந்த காரணம் மெல்ல மெல்லப் புலனாயிற்று. அவருக்குக் கொஞ்சம் பணம் தேவை. அந்த நிலை தமக்கு வந்த காரணத்தையும் விளக்கினார். அதில் உண்மை தொனித்தது. ரெயிலில் வந்தபோது அவர் கூறிய விஷயங்களுக்கும் இப்போது அவர் சிறிய சிக்கலுக்கும் பொருத்தம் இருந்தது. அவருடைய முடை நன்றாக விளங்கியது.

கணபதியின் கையிலும் பணம் இல்லை. தசராப் பயணம் உறிஞ்சிவிட்டதே! மனைவியிடம் வந்து சொன்னான்.

சாரதா, "நம்மிடம் கேட்டாரா? அழகு தான்!" என்றாள். "பணம் இருந்திருந்தால் நான் ஒரு சாந்திநிகேதன் புடைவை வாங்கிக் கொண்டிருக்க மாட்டேனா!" என்று மனத்தில் சொல்லிக்கொண்டாள்.

யட்சிணி சொல்லிக்கொடுத்த மாதிரி, அடுத்து ஒரு காரியம் செய்தார் நண்பர். பெட்டியிலிருந்து ஒரு புடைவையை எடுத்தார். "இதை வைத்துக்கொண்டு ஐம்பது ரூபாய் கொடுங்கள்" என்றார்.

"பணம் இருந்தால் கொடுத்திருப்பேனே! இதை வைத்துக்கொண்டுதான் தரவேணுமா?" என்றான் கணபதி.

"எனக்குப் பணம் மிகவும் அவசியமாய் இருக்கிறது. இப்படிப் பணம் பெற்றுக்கொள்வதில் எனக்கும் சற்று ஆறுதலாயிருக்கும்" என்று சொன்னார் அவர்.

அந்தப் புடைவையைச் சாரதாவிடம் கொண்டு வந்து காட்டி விஷயத்தைத் தெரிவித்தான் கணபதி.

"இப்பொழுது மட்டும் பணம் வந்து குதிக்குமா நம்மிடம்?" என்று கேட்டாள் சாரதா. புடைவையின் அழகிற சந்தன நிறத்தைப் பார்த்தவாறே.

"வீட்டு வாடகைக்கு எடுத்து வைத்திருக்கிறேன்; அதைக் கொடுத்துவிட வேண்டியது தான். என்ன பண்ணுகிறது?"

"இதை வைத்துக்கொள்கிறதா நாம்? மிகவும் விலை இருக்குமே இது!"

"இதற்கு ஐம்பதுகூடத் தர நம்மிடம் பணம் இல்லை. நாற்பதுதான் முடியும்."

"நமக்குப் புடைவை அநாவசியம்; அவர் போய்ப் பணத்தை அனுப்பிவிடட்டும்; சொல்லிவிடுங்கள். நம்பிக் கொடுப்போமா என்ற யோசனையின்மேல் இதைக் கொடுக்கிறார் போலிருக்கிறது. இருக்கட்டும். எதற்கும் நல்லது".

கணபதி புடைவையை எடுத்துக்கொண்டு போனான்; "இதைக் கொண்டுபோங்கள். பணம் ஊருக்குப் போய் அனுப்பலாம்; அது வரையில் சமாளிப்பேன்" என்றான்.

"எதற்கும் இருக்கட்டுமே, ஸார்" என்று அவர் பெட்டியைப் பூட்டிவிட்டார்; புறப்பட்டுப் போனார்.

அப்புறந்தான் சந்தேகப்பட்டுக்கொண்டே சாரதா புடைவையைப் பிரித்துப் பார்த்தாள். அது புத்தம் புதிது அல்ல. கொசுவி மடித்த இடங்களின் தடம் இருந்தது. ஒற்றையடிப் பாதை போலே.

"நினைத்தேன். இது அவருடைய பெண்டாட்டியின் புடைவையாக இருக்கும். அவள் போய்ப் பத்து வருஷங்கள் ஆகின்றன என்று சொல்லியிருந்தாரே!" என்று சொல்லிக் கொண்டே சேலையை மடித்தாள் சாரதா. காகிதத்தில் சுற்றி அவர் கொடுத்த மாதிரியே உள்ளே எடுத்து வைத்தாள். பிறகு அதைத் தொடவில்லை; தொடவே பிடிக்கவில்லை.

அற்ப ஆயுளில் இறந்த ஒருத்தியின் புடைவை என்ற அச்சமா? அல்லது எவளோ ஒருத்தியின் மேனி தீண்டின புடைவை என்ற அருவருப்பா? 'பணம் வந்ததும் புடைவையை அனுப்பப் போகிறோம்; ஆதலால் அது அயலார் பொருள்' என்ற தீர்மானமா? ஒரு சேலையை அடகுப் பொருளாக வைத்துக்கொண்டு பணம் கொடுத்த புதுச் செயலை எண்ணி வெட்கமா? என்ன காரணமோ, அந்தச் சந்தன வர்ணச் சேலை சாரதாவின் மற்றப் புடைவைகளுடன் ஒட்ட முடியாமல் காகிதப் பொட்டலமாகவே கிடந்தது பீரோவிலே.

• • •

"கடிதம் போட்டு பயன் இல்லை. கண்ணை மூடிக்கொண்டு உடுத்து. சரியாய்விடும்" என்று ஒரு நாள் கணபதி சிரித்தபடி சொன்னான்.

"முதலில் அதைக் கையில் எடுக்கப் பிடித்தால் அல்லவா?" என்று சாரதா சொன்னாள்.

"நான் எடுத்துப் பிரித்துத் தருகிறேன். ஆனால் உடுத்துவிடத் தெரியாது!" என்று புன்னகை செய்தான் கணபதி இப்படி ஏதோ சிரிப்பும் கேலியுமாகச் சந்தனம் பூசித் தெளித்து விளையாடினமாதிரிதான் பேசினார்கள்; இன்றுதான் சண்டைபோல ஒரு தர்க்கம்.

அவள் உடுத்தப் போவதில்லை; புடைவையின் கதி? புடைவை கிடக்கட்டும்; கையில் சுண்டியிழுத்தபோது களையாய்க் கொடுத்த பணத்திற்கு வழி?

பொய் புரட்டுப் பேசிப் பழகாத சாரதாவுக்கு இந்தப் புடைவை பெரிய பிரச்னையாக இருந்தது. நாசுக்கான அழகிய புடைவை. சரிகையும் பட்டும் இழையும்; தலைப்பு ஒன்றே போதும், மனம் கவர்ந்துவிடும்; பிறர் மனத்தைக் கவர்ந்துவிடும். "ஏது? எங்கே?" என்று சிநேகிதிகள் கேட்டால் என்ன சொல்வது? "அவர் வாங்கி வந்தார்; விலை தெரியாது" என்று சொல்லவேண்டும். சொல்லலாம். ஆனால் அதை உடுத்தும் உரிமை கொண்டாடும்போது தன் மனசு குன்றிக் கொண்டேதான் இருக்கப் போகிறது. ஐயம் இல்லை. அப்படித்தான் அதை உடுத்துவானேன்?

* * *

ரிக்ஷா போக வேண்டிய இடத்தை அடைந்தது. சிநேகிதி துளசி உற்சாகமாய் வரவேற்றாள். அங்கே குழுமியிருந்த மற்றத் தோழிகளும் புதுப் பெண்களும் சாரதாவைப் பிடிலுங் கையுமாகக் கண்டு, "வாத்திய கோஷ்டியில் சாரதா பிடில்" என்று அறிந்தனர். குடியரசு தினத்தன்று ராஜ பவனத்திலே ஒரு கதம்ப நிகழ்ச்சி நடக்கப் போகிறது. அதிலே ஓர் அம்சம் இந்தக் கோஷ்டி வாத்தியம். அதன் ஒத்திகைதான் துளசியின் இல்லத்தில் அன்று நடந்தது. சாரதா சிநேகிதியின் அன்பில் முங்கிக் குளித்தாள். எப்போதுமே துளசி, சாரதாவின் இசைத் திறமையை மிகுதியாகப் புகழ்வாள்.

இதுவரையில் உடுத்தாத உயர்ந்த புடைவையாக அணிந்து ராஜபவனம் செல்ல வேண்டும் என்ற எண்ணம் சாரதாவுக்கு வந்தது. அப்போது அவள் கண்முன் வந்து நின்றது சந்தன வர்ணச் சேலைதான். "உடுத்து" என்று கணவன் சொன்ன சொல் செவியில் ஒலித்தது. கணவனது புத்திமதியைத் தட்டாமல், நாற்பது ரூபாயை வீண் அடிக்காமல் அதை உடுத்த வேண்டியது தன் கடமை என்ற நினைப்புடன் சாரதா வீடு திரும்பினாள்.

சாரதா அந்தப் புடைவையை இரண்டாம் முறையாக எடுத்துப் பார்த்தாள். "நானே கட்டிக் கொள்ள வேண்டியதுதானே?" என்று கேட்டாள்.

"வெறுமனே கேட்பானேன்?" என்று சிணுங்கினான் கணபதி.

"ராஜபவனத்திற்கு உடுத்துக்கொண்டு போகிறேன்."

"உம்!"

"இன்றைக்கே ஒரு தடவை உடுத்துப் பார்த்துவிடுகிறேன்."

"இதற்குச் சரியாய் ரவிக்கை இருக்கிறதா?"

"இருக்கிறது; மன்னி அனுப்பினது."

சாரதா அப்பால் சென்று சரசரவெனப் பிரித்தாள் சேலையை. வேகமாகக் கொசுவி மேலாக்கும் போட்டாள். அதை உடுத்தியாயிற்று. அசட்டுச் சிரிப்புடனே கணவனுக்கு எதிரில் வந்தாள்.

"பேஷாயிருக்கிறது!" என்றார் கணபதி.

தானும் ஒரு தடவை கண்ணாடியில் பார்த்துக்கொள்ள நின்றாள். உடலின்மீது பூசிக் கொண்ட சந்தனக் குழம்பு உலர்ந்து சருமத்தை இழுப்பதுபோல ஓர் உணர்ச்சி உண்டாயிற்று. கணபதி அங்கேயே இருப்பதைப் பொருட்படுத்தவில்லை. "என்னவோ மாதிரி இருக்கிறது" என்று கூறி மேலாக்கைக் கீழே விடுத்துப் பரக்கப் பரக்க அவிழ்த்தாள். கீழே கிடந்த பழம் புடைவையை உள்பாவாடையின் மேல் சுற்றிக் கொண்டு விசுக்கென்று போய்விட்டாள்!

கணபதி, "ஏன்? என்று கேட்கவில்லை.

"மனத்தில் நெருடலோடே ராஜபவனத்திற்குப் போனால் பாட்டும் அழுது வடியும். என் மூஞ்சியும் அசடு வழியும். பழம் புடைவையை உடுத்த இது சமயம் அல்ல!" என்று சாரதாவே சற்று நேரம் கழித்து அவன் காதில் விழச் சொன்னாள்.

அவிழ்த்துப் போட்ட வேகத்துடனேயே மடித்து எடுத்து வைத்தபோது இதைச் சொன்னாள்; அதனால் 'வேறு சமயம் உடுத்துவாள்' என்ற எண்ணத்தினாலோ என்னவோ, கணபதி 'கம்' மென்று இருந்தான். தீச்சுடருடன் புகையும் ஊதுவத்தி போல அமைதியும் மிடுக்குமாயிருந்தான்.

ஒரு முறை உடுத்துவிட்டதனாலோ என்னவோ, சாரதா புடைவையை ஒரு தடவை உற்றுப் பார்த்துவிட்டுப் பீரோவில் வைத்தாள். தாலி கட்டிய தோஷத்திற்காக மனைவியை உடன் இருத்திக் கொண்டே அலட்சியப்படுத்தும் புருஷனைப் போல இருந்தாள் அவள். 'அழகிய புடைவை' என்ற நினைப்பையும் மறுக்க முடியவில்லை. மனைவிக்கு நற்குணம் போல, புடைவைக்கு அழகுதான் முக்கிய அம்சம் அல்லவா?'

'உடுத்து உரிமையாக்கிக் கொண்டாயிற்று; அதை அப்படி அவசர அவசரமாய் அவிழ்த்துப் போட்ட வேகந்தான் என்ன? அதனால் இப்படி ஒரு வெறுப்பு! கைமாறி வந்த பொருள் தான்; அதற்காக அப்படி ஏன் அருவருப்புத் தோன்ற வேண்டும்? அம்மாவின் புடைவையை எடுத்துக்கொண்டேன் என்று நினைக்கக் கூடாதா?'

இவ்வாறு தோன்றினதுமே சாரதாவைப் பயம் பிடித்துக் கொண்டது. அவளுடைய அருமை அன்னை உயிருடன் மங்களகரமாக இருக்கிறாள். 'இந்தப் புடைவையின் முதல் சொந்தக்காரி அற்பாயுசுக்காரி. அவளோடு அம்மாவை நினைப்பதா? கடவுளே, வேண்டாம். அம்மாவுக்கு ஒரு கெடுதியும் வந்துவிடக் கூடாது!'

அக்காள்தான் இல்லையே; அக்காள் கொடுத்தாள் என்று சொல்லிக்கொண்டால்? 'ஐயோ! அக்காள் கூட ஒருத்தி இருக்கிறாள். சித்தியின் பெண். கர்ப்பிணி; பாவம்! அவளுக்கு ஒரு தீங்கும் வரக்கூடாது. பெற்றுப் பிழைக்கட்டும்! அண்ணா, மதனி, அக்காள், அம்மா யாரும் இந்தப் புடைவையைத் தரவில்லை. யாரோ ஒருத்தி, எவளோ ஒரு சிநேகிதியாகவே இருக்கட்டும்; அவள் தந்தாள் என்ற மாதிரி இருந்துவிட்டுப் போகட்டும்!"

பொட்டலத்தைக் கண்மறைவாகப் பீரோவின் அடித்தட்டிலே வைத்துவிட்டுப் பீரோவை சாத்தினாள் சாரதா. உடுத்தியிருந்த புடைவையின் கீழ்ப்புறக் கரை பீரோவின் கதவில் சிக்கிவிட்டது. அதை விடுக்க மீண்டும் திறந்து மூடினாள். அப்படி மூடும்போது மனக் கதவினிடையே ஒரு முகம் எட்டிப் பார்த்துவிட்டது. நண்பர், ரெயிலில் காட்டிய போட்டோத் தொகுப்பில் காட்சியளித்துப் புன்னகை காட்டிய முகம். அந்த முகத்திற்கு உரியவள் இந்தச் சேலையின் முதற் சொந்தக்காரி. 'ஆகா, பேதை. இதை எப்படிப் போற்றியிருப்பாள்! ஆசையாய் உடுத்தியிருப்பாள்! அவள் செத்துப்போனாள். அவளுடைய மேனி தீண்டிய பொருள்- இந்தப் புடைவை - இங்கே சாபம் வாங்கிற்று-தீண்டத்தகாததாயிற்று!'

இப்படி நினைத்துப் பார்த்தாள். உடனே சாரதாவின் இருதயத்தில் விந்தையான மாறுதல் போந்தது. "என் சிநேகிதி!" என்று சொல்லிக்கொண்டாள். புகைப்படத்தில் கண்ட பெண்ணைச் சந்தன வர்ணச் சேலை உடுத்தியவளாய்க் கண்டாள்; கசிந்தது கனிவு.

புடைவையிலே போட்ட பணம் காரணமோ, புடைவையின் நேர்த்தி காரணமோ, அல்லது இறந்து போன ஒரு பெண்ணின் நினைவிலே ஏற்பட்ட கனிவோ? சாரதாவின் உள்ளம் கசிந்துவிட்டது.

ஆனால் கணபதி?

குடியரசு தினம் வந்தது. ராஜ பவனம் போகச் சாரதா அலங்கரித்துக் கொண்டாள். கொண்டை போட்டாயிற்று. பூச் சூடினாள். பொன்னிற ரவிக்கையை அணிந்தாயிற்று. சந்தன

வர்ணச் சேலையை உடுத்த எடுத்தாள். பெற்றோருக்கு உடைமையாக இருந்த ஒரு பெண்ணை, மணந்து மனைவியாக்கிக் கொண்டு, கைமாறி வந்தவள் என வெறுக்கலாமா? புடைவையை வெறுக்காமல் கையில் எடுத்தாள் சாரதா. கணபதி வியப்புடன், "இதையா கட்டிக் கொள்கிறாய்?" என்று வினவினான்.

"ஆமாம்" என்று புன்முறுவல் செய்து கொண்டே, "பாட்டு நன்றாக இராமற்போனால் புடைவை ஜவாப்தாரி ஆகாது!" என்றாள்.

"வேண்டாமே! அன்றைக்கு அப்படி ஒரேயடியாய் ஒதுக்கினாயே!"

"இன்றைக்கு உடுத்தப் போகிறேன் ஆசையாய்."

ஏனோ கணபதி தயங்கினான். பிறகு, "நானும் அதற்கப்புறம் யோசித்தேன். உனக்கு அதன் மேல் வெறுப்புக்குக் காரணம் என்னவென்று பார்த்தேன். நீ வேடிக்கையாய் அப்பொழுதப்பொழுது சொல்லுவாயே. இப்போது நிஜமாகவே பயப்படுகிறாய் என்று தெரிந்தது. எனக்கும் சரிதான் என்று தெரிந்தது. எதற்கு அதை உடுத்தவேணும் நீ?"

சாரதா ஆச்சரியத்தோடு தன் கணவனைப் பார்த்தாள். "நான் செத்துப்போனால் மறுமணம் புரிந்துகொள்வீர்கள்" என்று எப்போதாவது அவள் கேலி செய்தது உண்டு.

இப்போது இந்தப் புடைவை தன் மனைவிக்குத் தீங்கு செய்யக்கூடும் என்று அவள் கணவன் நினைக்கிறானோ? பயப்படுகிறானோ?

சிரிப்பு வந்தது சாரதாவுக்கு. "ஐய! எனக்கு அப்படிப்பட்ட பயம் தோன்றவே இல்லையே! என்னவோ, கைமாறி வந்த புடைவை என்று முன்னே நீங்களே இஷ்டப்படாமல் கோபித்துக்கொண்டு, இப்போது என்னை இஷ்டப்படச் சொல்கிறீர்களே என்று என்னவோ தோன்றிற்று. ஆனால் இப்போது? புடைவையை நம் தலையிலே கட்டினவர்மேல் கோபப்பட்டது கூடத் தப்பு. தன் புடைவையை என் இடுப்பில் கட்டிவிட்ட சிநேகிதியைத்தான் இனிமேல் நினைப்பேன்."

அரைகுறையாய் விளங்கினாலும் இளநீர்க் காயின் நீர்ப்பகுதியைப் பருகிவிட்ட மாதிரி திருப்தி உண்டாகிவிட்டது கணபதிக்கு.

"உன் மனசுக்கு நெருடல் இல்லை என்றால் சரி" என்று சொல்லிவிட்டான்.

"எனக்காகப் பயப்பட்டீர்கள் என்று தெரிந்த பிறகு கூட எனக்குச் சந்தோஷம் வராதாக்கும்!" என்று நினைத்து உவகையோடு உற்சாகமாய்ப் புறப்பட்டாள் சாரதா.

அன்று மாலை கதம்ப நிகழ்ச்சிக்குப் பிறகு சாரதா யாரிடமோ, "என் பழைய பள்ளித் தோழி இதை அஸ்ஸாமிலிருந்து அனுப்பினாள். நன்றாயிராவிட்டால் அனுப்புவாளா?" என்று சவுடால் அடித்ததைக் கேட்டுக் கணபதி பிரமித்து போனான். அதனால் சாரதாவைப் பற்றித் தாழ்வாக நினைத்துவிடவில்லை. புது உறவின் இனிமையைச் சொட்டுச் சொட்டாய் ஊட்டும் அந்தப் புடைவை அன்புக்கு உறைவிடமாயிற்று. சிநேகிதியின் சின்னமாயிற்று. சாரதா அப்படித்தானே உயர்வாக நினைக்கிறாள்?

**********

(கலைமகள், மார்ச், 1955)